# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-13 | Date | : 19.12.2024 |
| Case No. | : **O.S.492/2019** | Nationality | : Indian |
| Name | : ஆனந்தன் | Religion | : |
| Father's/Husband's Name | : பெரியசாமி | Age | : 41 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.13</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் அழைப்பாணை வந்ததாக தகவல் வந்தது. யார் தகவல் சொன்னது என்றால் ரமேஷ் தகவல் சொன்னார். அவர் தகவல் சொன்னதின்பேரில்தான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் கூறியது என்றால் வழக்கறிஞர் தட்டச்சு செய்து கொடுத்தார் நான் அதை படித்து பார்த்தேன். வழக்கறிஞர் தட்டச்சு செய்து கொடுத்ததில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேனா அல்லது விவரம் கூறினேனா என்றால் அவர் கேட்ட கேள்விகளுக்கு நான் பதில் கூறினேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரியல்ல. தெரியும். நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் நான் வசித்து வருகிறேனா என்றால் இல்லை. அது எனது நிரந்தர முகவரியாகும். நான் தற்போது சிற்றிடையாநல்லூரில் உள்ள எனது மாமியார் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு திருவாரூரில் உறவினர் யாரும் உள்ளார்களா என்றால் இல்லை. நான் சிற்றிடையாநல்லூரில் வசிப்பதாக வழக்கறிஞரிடம் விவரம் கூறினேனா என்றால் இல்லை. நான் பொய்யான முகவரியை குறிப்பிட்டு நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அது எனது நிரந்தர முகவரியாகும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் வாதிக்கும் முகமது ஆரிப்புக்கும் இடையிலான நில பிரச்சனை குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்களில் கண்ட சொத்துக்களின் விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கணேஷ் பைனான்சில் வேலை செய்து வருகிறேன். வாதிக்கு கணேஷ் என்ற பெயரில் ஒரு சகோதரர் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு மோகன் என்ற பெயரில் ஒரு சகோதரர் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எந்த முகவரியில் வசிக்கிறார் என்று தெரியுமா என்றால் ஸ்ரீநகர் காலனி கும்பகோணத்தில் வசித்து வருகிறார். எந்தெந்த புல எண்களில் எவ்வளவு விஸ்தீரணத்தில் நெல், கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் கரும்பு நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கணேஷ் பைனான்சின் உரிமையாளர் யார் என்றால் எனக்கு தெரியவில்லை. ஆதித்தன் என்பவர் மேலாளராக ஆக உள்ளார். நான் பைனான்சில் எத்தனை வருடங்களாக வேலை செய்கிறேன் என்றால் சுமார் 5, 6 வருடங்களாக வேலை பார்க்கிறேன். 5, 6 வருடங்களாக மேலாளர் ஆதித்தனை தெரியும் என்றால் தெரியும். மேற்படி ஆதித்தன் என்பவருக்கு

மோகன் என்ன உறவு முறை என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் சகோதரர் மோகன் என்பவரின் மருமகன்தான் ஆதித்தன் என்றால் எனக்கு தெரியாது. ஆதித்தனின் சொந்த ஊர் தெரியுமா என்றால் தெரியாது. நான் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளரின் சகோதரர்தான் வாதி என்பதால் அவருக்கு அனுசரணையாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.20 09:51:25 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.